**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பாலக்கோடு.**

**முன்னிலை : திரு.G.அஜய் விக்ரிஷ் குமார், B.B.A.,LLB.,(Hons).,**

**குற்றவியல் நீதித்துறை நடுவர், பாலக்கோடு.**

**2026 –ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13–ஆம் நாள் வியாழக்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்(CC).53/2025**

**(CNR No.TNDP05-000415-2025)**

அரசுக்காக

காவல் ஆய்வாளர்,

பாலக்கோடு காவல் நிலையம்,

குற்ற எண்.138/2024. .... குற்றமுறையிடுபவர்

/இடையே/

பூபதி (வயது 30/2024)

த/பெ. செல்வம்,

குட்டப்பட்டி கிராமம்,

பன்னிஅள்ளி அஞ்சல்,

கிருஷ்ணகிரி தாலுக்கா,

கிருஷ்ணகிரி மாவட்டம். .... எதிரி

இவ்வழக்கு கடந்த 28.03.2025–ம் தேதி இந்நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.53/2025 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தின் முன்பு 10.08.2026ஆம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.H.கண்ணன்,M.A.,B.L., மற்றும் திருமதி.Kபாரதி,B.Com.,B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை நன்கு பரிசீலனை செய்து இன்று

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.08.13 18:09:16 +0530

இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

<table>
<tr><td></td><td>S.No of the case</td><td colspan="3">C.C. No.53/2025</td></tr>
<tr><td>a.</td><td>The Date of commission of the offence</td><td colspan="3">23.05.2024</td></tr>
<tr><td>b.</td><td>Date of filing of FIR</td><td colspan="3">24.05.2024</td></tr>
<tr><td rowspan="2">c.</td><td rowspan="2">Details on date of arrest of Accused and date of bail</td><td colspan="2">Arrest of Accused</td><td>Accused was released on Station Bail</td></tr>
<tr><td colspan="2">---</td><td>---</td></tr>
<tr><td>d.</td><td>The date of filing of the final report in the Court</td><td colspan="3">28.03.2025</td></tr>
<tr><td>e.</td><td>The date of questioning of the accused U/s 251 of Cr.P.C.</td><td colspan="3">30.10.2025</td></tr>
<tr><td>f.</td><td>Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before Superior Courts; except routine petitions like petitions under section 317 of the Code.</td><td colspan="3">NIL</td></tr>
<tr><td rowspan="5">g.</td><td rowspan="5">Date of examination in - chief and cross examination of a witness.</td><td>Prosecution side witnesses</td><td>Chief examination</td><td>Cross examination</td></tr>
<tr><td>PW1</td><td>19.05.2026</td><td>19.05.2026</td></tr>
<tr><td>PW2</td><td>19.05.2026</td><td>19.05.2026</td></tr>
<tr><td>PW3</td><td>04.07.2026</td><td>04.07.2026</td></tr>
<tr><td>PW4</td><td>04.07.2026</td><td>04.07.2026</td></tr>
</table>

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.08.13 18:09:21 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | | PW5 | 28.07.2026 | 28.07.2026 |
| | | PW6 | 28.07.2026 | 28.07.2026 |
| h. | Date of examination in - chief and cross examination of a witness. | Nil | | |
| i. | Date of examination of the accused and Under Section 313 of the Code. | 04.08.2026 | | |
| j. | Details of abscondence of an accused and his appearance / production, as the case may be; | **Date of issue of warrant** | **Date of withdrawal of warrant** | |
| | | -- | -- | |
| k. | Date adjourned for judgment of the case | 10.08.2026 | | |
| l. | The Date of the Order | 12.08.2026 | | |

1) இவ்வழக்கானது பாலக்கோடு, காவல் ஆய்வாளரால் எதிரி மீது இந்திய தண்டனைச்சட்டம் பிரிவுகள் 279, 304(A) –ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் பேரில் தொடரப்பட்டதாகும்.

**2) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு–**

i) கடந்த 23.05.2024–ம் தேதி இரவு 23.30 மணிக்கு பாலக்கோடு, ஆரதஅள்ளி to காவேரிபட்டிணம் ரோடில் மகா ஆக்ரோ தனியார் ஜூஸ் கம்பெனி அருகில் சாட்சி 1–ன் கணவர் தருமன் TN 24 P 7441 என்ற இரு சக்கர வாகனத்தில் சென்றபோது அவருக்கு எதிர் திசையில் காவேரிப்பட்டிணம் to ஆரதஅள்ளி நோக்கி வந்த எதிரி பூபதி KA 01 AF 9063 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து தருமன் ஓட்டி வந்த வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியும், மேற்படி

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.08.13 18:09:27 +0530

விபத்தினால் தருமனுக்கு பலத்த இரத்த காயத்தை ஏற்படுத்தி அவருக்கு இறப்பை ஏற்படுத்தியுள்ளார். எனவே எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A) –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக பாலக்கோடு, காவல் ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3) எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு – 207ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. இறுதி அறிக்கையையும், அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களையும் பரிசீலனை செய்து, எதிரி மீது இந்திய தண்டனைச்சட்டபிரிவுகள் 279, 304(A) –ன் படி, குற்றம் பற்றி எடுத்துரைத்து வினவியபோது, எதிரி குற்றத்தை மறுத்து விசாரணை செய்யப்படவேண்டும் என்று கோரினார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4) அரசு தரப்பு சாட்சிகளாக அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டார்கள். அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்றுபொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

5. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு–</u>

i) கடந்த 23.05.2024–ம் தேதி இரவு 23.30 மணிக்கு பாலக்கோடு, ஆரதஅள்ளி to காவேரிபட்டிணம் ரோடில் மகா ஆக்ரோ தனியார் ஜூஸ் கம்பெனி அருகில் தீபா(அ.சா.1) –னின் கணவர் தருமன் TN 24 P 7441 என்ற இரு சக்கர வாகனத்தில் சென்றபோது எதிரி பூபதி KA 01 AF 9063 என்ற பதிவெண் கொண்ட காரை ஓட்டி வந்து அ.சா.1னின் கணவர் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. மேற்படி விபத்தில் அ.சா.1–ன் கணவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்ட சம்பவ இடத்திலேயே இறந்துள்ளார். இறந்த நபரை தருமபுரி அரசு

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.08.13 18:09:32 +0530

மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளார்கள். விபத்து குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டி அ.சா.1 நிலையம் ஆஜராகி காவல் உதவி ஆய்வாளர் திருமதி.கல்பனா(not examined) வசம் புகார் மனு (அ.சா.ஆ.1) அளிக்கப்பட்டுள்ளது.

ii) காவல் உதவி ஆய்வாளர் திருமதி. கல்பனா மேற்படி புகாரினை பெற்று அதனை நிலைய குற்ற எண்.138/2024 இ.த.ச.பிரிவுகள் 279, 304(A) –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை(அ.சா.ஆ–3) பதிவு செய்து இவ்வழக்கின் கோப்பினை காவல் ஆய்வாளர் திரு.பாலசுந்தரம் (not examined) வசம் ஒப்படைக்கப்பட்டது.

iii) காவல் ஆய்வாளர் திரு.பாலசுந்தரம் இவ்வழக்கினை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம்சென்று சாட்சிகள் முருகேசன்(அ.சா.3), பிரவீன் (அ.சா.4) ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர்(அ.சா.ஆ.2), மாதிரி வரைபடம்(அ.சா.ஆ.4), தயாரித்துள்ளார். இவ்வழக்கில் இறந்த நபரான தருமன் என்பவரது பிரேதம் இருந்த மருத்துவமனை சென்று பஞ்சாயத்தார் சாட்சிகள் முன்னிலையில் தருமனின் பிரேத விசாரணை அறிக்கை(அ.சா.ஆ.5) தயாரித்துள்ளார்.

iv) அதைத்தொடர்ந்து சாட்சிகள் பூவரசன்(அ.சா.2), ராஜா (not examined), படவட்டம்மாள்(not examined), ஆனந்தன்(not examined) மற்றும் மகஜர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் இறந்துபோன நபரின் உடலை சடலக்கூறாய்வு செய்த மருத்துவர் பிரசன்னாம்பிகா (Not examined) என்பவரை விசாரித்தும் தருமனின் பிரேத பரிசோதனை அறிக்கை(அ.சா.ஆ–6), –ஐ பெற்றுள்ளார்.

v) இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் வெங்கிடுசாமி (not examied) –ஐ விசாரித்து KA 04 AF 9063

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.08.13 18:09:37 +0530

என்ற பதிவெண் கொண்ட காரின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை(அ.சா.ஆ.7), மற்றும் TN 24 P 7441 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை(அ.சா.ஆ.8) –ஐ பெற்றும். சாட்சி விசாரணை முடித்தும், இவ்வழக்கின் எதிரி மீது U/s.279, 304(A) of IPC –ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சி விசாரணை முடிவுற்றது. மேலும் இவ்வழக்கின் கூடுதல் சாட்சியாக பாலக்கோடு, காவல் ஆய்வாளர் திரு.சுப்பிரமணியம் அ.சா.6 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

6) இவ்வழக்கில் எதிரிக்கு பாதகமாக உள்ள சாட்சியங்கள் குறித்து எதிரியிடம் குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் வினவிய பொழுது, எதிரி அவற்றை பொய் சாட்சிகள் எனவும், பொய் வழக்கு என்றும் தன் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். எனவே எதிரி தரப்பில் சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

7) அரசு தரப்பு வாதுரையில் இவ்வழக்கின் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றசாட்டுகள் உண்மை எனவும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது எனவும் எனவே எதிரியை தண்டிக்க வேண்டும் என வாதுரைக்கப்பட்டது.

8) எதிரி தரப்பு வாதுரையில், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை எனவும், புள்ளிவிபரத்திற்காகவும், இழப்பீடு கோருவதற்காகவும் எதிரியின் மீது பொய் புகார் கொடுத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும் எனவே எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என வாதுரைக்கப்பட்டது.

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.08.13 18:09:42 +0530

9) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஆழ்ந்து பரிசீலனை செய்யப்பட்டது.

10) **இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீது இந்திய தண்டனைச்சட்டபிரிவுகள் 279, 304(A) – ன் கீழான குற்றங்களை அரசு தரப்பினால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பதே ஆகும்.**

**<u>தீர்வு</u>**

i) இவ்வழக்கின் புகார்தாரர் தீபா அரசு தரப்பில் அ.சா.1 –ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 23.05.2024 –ம் தேதி இரவு 10:00 மணியளவில் தனது கணவர் சீட்டு பணம் கட்டுவதற்காக அண்ணாமலைஅள்ளிக்கு சென்றார் எனவும், 24.05.2024 –ம் தேதி காலை 06:30 மணியளவில் காவல் நிலையத்தில் இருந்து போன் செய்து தனது கணவர் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள் எனவும், தருமபுரி அரசு மருத்துவமனையில் தனது கணவரை பார்த்ததாகவும் விபத்து குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

ii) பூவரசன் (அ.சா.2) தனது சாட்சியத்தில் 24.05.2024 –ம் தேதி காலை 06:30 மணியளவில் தனக்கு போன் மூலம் தனது அண்ணன் தருமன் கார் மோதி விபத்தில் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள் எனவும், தருமபுரி அரசு மருத்துவமனை சென்று அண்ணனை பார்த்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

iii) வழக்கின் பார்வை மகஜர் சாட்சிகள் முருகேசன் (அ.சா.3) மற்றும் பிரவீன்(அ.சா.4) தங்களது சாட்சியத்தில் விபத்து நடந்தது சம்பந்தமாக சம்பவ இடம் வந்து போலீசார் வரைபடம் வரைந்து தயாரித்த பார்வை மகஜரில் தங்கள்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.08.13 18:09:47 +0530

சாட்சி கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்கள்.

iv) வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் சம்பவத்தை பார்த்ததாக சாட்சியம் அளிக்கப்படவில்லை, மேலும் எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை இயக்கி விபத்தை ஏற்படுத்தினார் என அரசு தரப்பு சாட்சிகள் சாட்சியம் அடிப்படையில் நிரூபிக்கப்படவில்லை.

v) எனவே எதிரி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் இயக்கி இருசக்கரவாகனத்தில் பயணித்த தருமன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபிக்கப்படவில்லை என நீதிமன்றம் கருதுகின்றது.

vi) எதிரி வாகனத்தை அதிவேகமாக அதாவது U/s.304(A) of IPC –வில் சொல்லியுள்ளபடி "Rash" என வாகனத்தை இயக்கி விபத்தை ஏற்படுத்தினார் என அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. என இந்நீதிமன்றம் கருதுகிறது.

vii) எதிரி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரத்தையாகவும் இயக்கி விபத்தை ஏற்படுத்தினார் என அரசாங்க தரப்பில் விசாரிக்கபட்ட சாட்சிகள் அடிப்படையில் நிரூப்பிக்கப்படவில்லை. எனவே இவ்வழக்கில் ஏற்படக்கூடிய சந்தேகங்களை எதிரிக்கு சாதகமாக அளிக்க வேண்டிய நிலை உள்ளது.

எனவே, **முடிவாக,** எதிரி மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவுகள் 279, 304(A) –ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டார்கள் என்று தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 255(1) –ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் எதிரிக்காக எழுதி கொடுக்கப்பட்ட பிணையபத்திரம் இவ்வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.08.13 18:09:53 +0530

இவ்வழக்கில் வழக்கு சொத்துகள் எதுவும் தாக்கல் இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13–ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.08.13 18:09:58 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்
பாலக்கோடு.

**அனுபந்தம்**

**1. அரசு தரப்பு சாட்சிகள்**

அ.சா.1 – திருமதி.தீபா

அ.சா.2 – திரு.பூவரசன்

அ.சா.3 – திரு.முருகேசன்

அ.சா.4 – திரு.பிரவீன்

அ.சா.5 – திருமதி.கல்பனா (காவல் உதவி ஆய்வாளர்)

அ.சா.6 – திரு.சுப்பிரமணியம் ( காவல் ஆய்வாளர்)

**2.அரசு தரப்பு சான்றாவணங்கள்**

அ.சா.ஆ – 1 புகார் மனு

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.08.13 18:10:04 +0530

அ.சா.ஆ – 2 பார்வை மகஜர்

அ.சா.ஆ – 3 முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ – 4 மாதிரி வரைபடம்

அ.சா.ஆ – 5 பிரேத விசாரணை அறிக்கை (தருமன்)

அ.சா.ஆ – 6 பிரேத பரிசோதனை அறிக்கை (தருமன்)

அ.சா.ஆ – 7 மோட்டார் வாகன ஆய்வறிக்கை (KA 01 AF 9063)

அ.சா.ஆ– 8 மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 24 P 7441)

3. **அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்று பொருள்** – இல்லை

4. **எதிரி தரப்பில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள், சான்று பொருட்கள்** – இல்லை

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.08.13 18:10:09 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்

பாலக்கோடு.

<u>குறிப்பு–</u>

1. தீர்ப்பின் நகல் அரசு தரப்பினருக்கு இலவசமாக வழங்க உத்தரவிடப்பட்டது.
2. எந்த ஒரு சாட்சியும் மூன்று முறைக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் சென்றுள்ளார்.
4. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் இல்லை.